| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 100/2011 |
| **DATE** | : | **26.09.2024** |
| **NAME** | : | **ரத்தினகுமார்** |
| **FATHER'S NAME** | : | **சிற்சபை** |

**பி.சா.1 குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கு சம்மந்தப்பட்ட உயில் ஆனது 10.10.1982 ம் வருடம் எழுதப்பட்டது. அந்த உயில் எழுதப்பட்ட போது என்னுடைய வயது என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. அப்போது எனக்கு திருமணம் நடைபெற்றுவிட்டது. எனக்கு 1976 ம் வருடம் முதல் திருமணம் நடைபெற்றது. 1980 ம் வருடம் இரண்டாவது திருமணம் நடைபெற்றது. முதல் திருமணம் மூலமாக எனக்கு ஒரே ஒரு பெண் குழந்தை உள்ளது. இரண்டாவது திருமணம் மூலமாகவும் ஒரு பெண் குழந்தை உள்ளது. ஆக எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். இரண்டு திருமணத்தின் வழியில் எனக்கு ஆண் வாரிசுகள் எதுவும் கிடையாது. நான் 10.10.1982 ல் உயில் எழுதப்பட்ட போது சென்னையில் இருந்தேன். அந்த உயிலானது காஞ்சிபுரத்தில் எழுதப்பட்டது. இந்த உயில் எழுதப்பட்ட காலத்தில் என் தந்தையின் வயது 72 ஆகும். நான் எனது பதிலுரையில் 12 ம் பத்தியில் இரண்டாம் பிரதிவாதி என்னுடைய சட்டப்படியான மகன் என்று தெரிவிப்பதற்கு என்ன காரணம் என்றால் அவரை நான் சட்டப்படியாக சுவீகாரம் எடுத்துள்ளேன். அதனால் அவ்வாறு தெரிவித்திருக்கிறேன். எனது பதிலுரையில் இரண்டாம் பிரதிவாதியை சட்டப் பூர்வமாக சுவீகாரம் எடுத்துக் கொண்டதாக குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் தெரிவித்திருக்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.R.Rajeswari)
Principal District Munsif,
Kancheepuram.